Deposition of Witness for : PW-1 | Date : 07/02/2023

| | | | |
|---|---|---|---|
| Case No. | : **O.S. 469/2019** | Nationality | : Indian |
| Name | :முருகன் | Religion | : |
| Father's/Husband's Name | : ராமசாமி | Age | :53 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கினை நான் 3 சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 218/9 ல் கண்ட சொத்து காரைக்கால் ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். 217/2 ல் கண்ட சொத்து படுகை நிலம் என்றால் சரிதான். 194/7 ஏ 1, 194/7 ஏ 2 ல் கண்ட சொத்துக்கள் காரைக்கால் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். பிரச்சனை 218/9 ல் கண்ட சொத்தில் தான் என்றால் சரியல்ல. 218/9 மற்றும் 194/7 ஏ 1, 194/7 ஏ 2 ல் கண்ட சொத்துக்களில் பிரச்சனை உள்ளது.

படுகை நிலம் ஆரம்பத்தில் கரும்பாயிரம் என்பவரிடம் இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. அந்த சொத்து கரும்பாயிரத்திடம் இருந்து வாங்கி முனியாண்டி என்பவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முனியாண்டி தங்கராசு என்பவருக்கு விற்பனை செய்து தங்கராசு அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த தங்கராசுவின் மகன் தான் பிரதிவாதி என்றால் சரிதான். 217/2 படுகை நிலத்தில் ஒரு ஓட்டு கட்டிடம், மாடி வீடு மற்றும் கூரை வீடு உள்ளதா என்றால் கிழக்கு பக்கம் கீத்து கொட்டகை, அதற்கு அடுத்து ஓட்டு வீடு, அதற்கு அடுத்து மாடி வீடு உள்ளது. அந்த மூன்று வீடுகளும் பிரதிவாதியினுடையது என்றால் சரிதான். நான் படுகை நிலத்தினை நான் எப்போது வாங்கினேன் என்றால் 2013 ம் வருடம் வந்தேன். எனக்கு முன்னால் பிரதிவாதி

படுகை நிலத்தில் 30-40 வருடங்களாக இருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

நான் படுகை நிலத்தை வாங்குவதற்கு முன்பே அந்த இடத்தில் முள்வேலி இருந்தது என்றால் முள்வேலி இருந்தது. அந்த முள்வேலியை ராஜகோபால் என்பவர் போட்டிருந்தார். முள்வேலி பிரதிவாதியால் அமைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய பிறகு முள்வேலியை அகற்றிவிட்டு சிமெண்ட் சிலாப் அமைத்துள்ளேன் என்றால் பாதி இடத்தில் அமைத்துள்ளேன். மீதி பகுதியில் தற்போதும் முள்வேலி உள்ளது என்றால் சரிதான். நான் காம்பவுண்ட் சுவர் அமைக்கும்போது பிரதிவாதியின் இடத்தையும் சேர்த்து சுமார் 500 சதுர அடி இடத்தை ஆக்கிரமித்து சுவர் அமைத்தேன் என்றால் சரியல்ல.

எனது சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளாரா என்றால் ஆக்கிரமிக்க முயற்சி செய்தார். அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதியின் சொத்து ஒரே நேர்க்கோட்டில் உள்ளது என்றால் சரியல்ல. கொஞ்சம் வளைவாக உள்ளது. நான் சொத்தை வாங்கியபோது சர்வேயர் வைத்து அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் இல்லை. தெருவிலிருந்து முள்வேலி வரைக்கும் உள்ள சொத்தினை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். காரைக்கால் ரோட்டிற்கு தெற்கில் சர்வே எண்.218/9 சொத்து உள்ளது. வடக்கில் சர்வே எண்.194/7 ஏ 1 மற்றும் 194/7 ஏ 2 சொத்து உள்ளது.

சர்வே எண். 217/2 ல் கண்ட சொத்து காரைக்கால் ரோட்டிற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. சர்வே எண்.218/9 சொத்திற்கு எந்த பக்கம் எனது வீடு உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. சர்வே எண்.194/7 ஏ 1 மற்றும் 194/7 ஏ 2 ல் கண்ட சொத்தின் எல்லை பிரச்சனை சம்மந்தமாக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது சொத்து சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. சர்வே எண்.194/7 ஏ 1 மற்றும்

194/7 ஏ 2 ல் கண்ட சொத்திலும் உரிமை உள்ளதாக பிரதிவாதி கட்சி செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளேனா என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI
Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.